

# சிலுவைப்பாதை

- அருட்சகோதரி ஆரோக்கியமேரி SMA.

## தொடக்க செபம்

முதல்வர்: தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே, ஆமென்!

எல்லோரும்: இரக்கத்தின் ஊற்றே இறைவா, உம் திருமகன் இயேசுவின் பாடுகளையும் இறப்பையும் நாங்கள் நினைவுகூர்கின்றோம். அவர் நடந்து சென்ற சிலுவையின் பாதையில் அவரைப் பின்சென்று நடந்திட நாங்கள் வந்துள்ளோம். இறுதிவரை இயேசுவின் உண்மைச்சீடராக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை இறைஞ்சி மன்றாடுகின்றோம். ஆமென்!

**சுருக்கமான மனத்துயர் செபம்:**

என் இறைவா! நன்மை நிறைந்தவர் நீர். அனைத்திற்கும் மேலாக அன்புக்கு உரியவர். என் பாவங்களால் உம்மை மனநோகச் செய்துவிட்டேன். ஆகவே நான் குற்றங்கள் பல செய்தேன் எனவும், நன்மைகள் பல செய்யத் தவறினேன் எனவும் மனம் நொந்து வருந்துகிறேன். உமது அருள் துணையால் நான் மனம் திரும்பி, இனிமேல் பாவம் செய்வதில்லை என்றும், பாவத்துக்கு ஏதுவான சூழ்நிலைகளை விட்டு விலகுவேன் என்றும் உறுதி கொடுக்கிறேன்.

*எங்கள் மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் பாடுகளின் பயனாக,*

*இறைவா, என்மேல் இரக்கமாயிரும்.*

திவ்விய இயேசுவே! எங்களுக்காகவும் உத்தரிப்புநிலை ஆன்மாக்களுக்காகவும் சிலுவைப் பாதையைத் தியானிப்பவர்களுக்கு அளிக்கப்படும் பலன்களை அடைய விரும்பி, உம் இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுகிறோம்.

புனித மரியாவே! வியாகுல அன்னையே! இயேசுவின் பாடுகளின் போது அவரோடு நீர் உடனிருந்து, அவருடைய பாடுகளில் பங்கேற்றது போல, நாங்களும் எங்கள் அயலார் அனுபவிக்கும் துன்பங்களில் அவர்களுடன் இருந்து துணைபுரியும் ஆற்றலைப் பெற உம் திருமைந்தனிடம் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## சிலுவைப்பாதை நிலையின் தொடக்கத்தில்

இயேசு கிறிஸ்து பாடுபட்ட ----ஆம் நிலை

இயேசுவே! உமது திருச்சிலுவையை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

ஏனெனில் உமது திருச்சிலுவையால் நீர் எங்களை மீட்டருளினீர்.

## சிலுவைப்பாதை நிலையின் முடிவில்

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாகுக.

தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

எங்கள் மேல் இரக்கமாயிரும் இயேசுவே

எங்கள் மேல் இரக்கமாயிரும் - 2

இறந்த நம்பிக்கையாளர்கள் உமது இரக்கத்தினால் உம்மில் நிறைவாழ்வு பெறுவார்களாக! ஆமென்.

## முன்னுரை



மானிடம் மறுமலர்ச்சி பெற வகுத்த பாதை

புனிதம் மனிதத்தில் புதைந்து - நம்மை

புண்ணியத்தில் வளர்த்தெடுக்கும் பாதை

மனுக்குலத்தை மாற்றத்தை நோக்கி நடத்தும் பாதை - இது

விடியலின் பாதை, மனித விருட்சத்தின் பாதை

சத்தமில்லாமல் சிலுவையை முத்தம் செய்து

சரித்திரம் புரிந்த சாதனையாளரின் பாதை

பயணிப்போம்! பாவம் துறப்போம்! அவர் பாதம் நடப்போம்!

## முதல் நிலை

### நீதிக்கு அநீதி கொடுக்கும் அநியாயத் தீர்ப்பு!



களங்கமானவள் என்று கல்லால் எறிய வந்த

கயவர்களுக்கு கடினமான தீர்ப்பு கூறி

கருணையானவர் ஆனார் களங்கமானவளுக்கு - அதனால்


ஒரு மனிதம் புனித வாழ்வுக்குள் நுழைந்தது - இங்கே

அந்த புனிதம் மனிதத்தின் மழுங்கிய அறிவால்

மண்ணுக்குள் புதைக்கத் தீர்ப்பிடப்படுகிறார்.

## இரண்டாம் நிலை

### பாவச் சின்னம் புனிதச் சின்னமாகிறது அவரின் தோளில்!



அன்று வரை அவமானத்தின் சின்னம்,

இன்று அன்பின் சின்னமாகிறது அவரால்

படைக்கப்பட்டதின் புண்ணியத்தைப் பெற்றது

இந்த சிலுவை மரம் - இது

மீட்பின் சின்னம் மட்டுமல்ல - மாறாக

மீட்பரோடு பயணித்த சின்னம்.

## மூன்றாம் நிலை

### முதல் உரையாடல் பூமித் தாயோடு!

மண்ணிலிருந்து உருவாக்கிய மானிடன் - இன்று



படைத்த பரமனை தன் பாரமான பாவத்தால்

மன்னவனை மண்ணை முத்தமிட வைக்கிறான்


முதல் முறையாக

பூமித் தாய் பூப்பந்தாக மாறி

தூக்கி விடுகிறாள் தூயவரை.

## நான்காம் நிலை

### தாய் சேய் கண்கள் சந்திப்பு!



சத்தமில்லாத சந்திப்பு

சரித்திரவான்களின் சந்திப்பு

இலட்சியத்தை நோக்கி பயணிக்க வைத்த சந்திப்பு

கஷ்டத்தை இஷ்டமாக மாற்ற வைத்த சந்திப்பு

சரித்திரம் படைக்க சவால் விட்ட சந்திப்பு - இந்தச்

சந்திப்பை நாம் சிந்திப்போம்.

## ஐந்தாம் நிலை

### கட்டாயத்தால் கடவுளுக்கு கைம்மாறு காட்டியவர்!



வழிப்போக்கனாய் வந்தவருக்கு கொஞ்ச நேரம்

வாழ்வளித்தவரின் வலி தீர்க்க வாய்ப்புக் கிடைத்தது.

வயல்வெளியில் வாழ்ந்தவனுக்கு வரலாற்றில்

இடம்பிடிக்க வாய்ப்பளித்தார் இந்த

வரலாற்று நாயகன்.

## ஆறாம் நிலை

### வீரம் கொண்டாள் வெரோணிக்கா!



ஆண்கள் கூட அமைதியாக அடங்கி நின்ற நேரம்

விளிம்பில் வாழ்ந்த வீர மங்கை வெகுண்டெழுந்து

வீரர்கள் மத்தியில், வீரத்தோடு வாழக் கற்றுக் கொடுத்தவரின்

இரத்த வியர்வை முகம் துடைக்க

தன் முகம் பதித்து பதிலளித்தார் நம் பரமன்.

## ஏழாம் நிலை



### இரண்டாம் முத்தம் பூமித்தாய்க்கு!

விழுவது பலவீனமல்ல,

வீழ்ந்தே கிடப்பதுதான் பலவீனம்

விழுந்தவர் எழுந்தார் தன் இலக்கு நோக்கிப் பயணிக்க

இலட்சியவாதிகள் வீழ்வதிலும் எழுச்சி காண்பர் என்று மெய்ப்பித்தார்

இந்த எழுச்சி நாயகன்.

## எட்டாம் நிலை

### பச்சை மரத்திற்கு பட்ட மரத்தின் அனுதாபம்!



பரமன் படைப்பில் பாசமான படைப்பு தான் பெண்கள்

தனக்காக கண்ணீர் சிந்தியவர்களின்

கண்ணீரைத் துடைக்கும் கடவுள் இவர் - அதனால்

கொடுத்தே பழகியவருக்கு வாங்குவதற்கு மனமில்லாமல்

எனக்காக அழ வேண்டாம்,

உங்களுக்காகவும், உங்கள் உறவுகளுக்காகவும் அழுங்கள் என்கிறார்.

## ஒன்பதாம் நிலை - இறைவனின் இறுதி இடறல்!



மேகத்திலிருந்து கீழ் விழும் மழைத்துளி

விழுந்து விட்டேன் என அழுவதில்லை

மாறாக பெருங்கடலோடு சங்கமமாவதை எண்ணி விழுகிறது

உலக மீட்பரும் விழுகிறார் கல்வாரி இலக்கைப் பார்த்து

தந்தையோடு சங்கமமாகி மானிட மீட்பு

விடுதலைக்காக மீண்டும் எழுகிறார்.

## பத்தாம் நிலை - ஆடை இழந்த ஆண்டவன்!



ஆதாமுக்கு ஆடை தைத்துக் கொடுத்த

ஆண்டவனின் ஆடை பறிக்கப்பட்டு

அவமானமாக்கப்படுகிறார்

ஆர்ப்பரிக்கின்றனர் ஆணவக்காரர்கள் - நம்

அங்கங்களை மறைத்து மாண்போடு வாழ

அழைக்கின்றார் நம் ஆண்டவர்.

## பதினொன்றாம் நிலை

### ஆணிகளுக்குள் அடைபடுகிறார் ஆண்டவர்!



சிலுவையில் அறைந்து கழுமரம் ஏற்றுகிறார்கள்

கயவர்கள் நம் சிலுவை நாதனை

இவர் உடல் சிதைந்தாலும் சிரம் தாழ்த்தி

மன்னிப்பு வழங்குகிறார் நம் மாபரன்.

## பன்னிரண்டாம் நிலை

### உயிர் துறந்தார் நமக்காக!

மூன்று மணி நேரம் மூச்சு விட சிரமப்பட்டாலும் - இறுதி



முணங்கலில் கூட தன் தந்தையிடம் முறையிடாமல்

தெரிந்தே பாவம் செய்த நமக்காக

தெரியாமல் செய்து விட்டனர் என

கருணை மனு கொடுத்து - தன்

கண்கள் மூடுகிறார் கார்மேக நாதன்

## பதிமூன்றாம் நிலை

### தாய் மடியில் பிணமாக தனயன்!



மங்கல வார்த்தை முதல் இந்நொடி வரை

நடப்பதைப் புரிந்து கொள்ளாமல்

எல்லாம் உம் சித்தம் என வாழ்ந்தவருக்கு

எவராலும் ஏற்க முடியாத வலி பரிசாகிறது

உயிரற்ற மகனின் உடல் மடியில்

வலிகளைத் தாங்கி வியாகுல அன்னையாகிறார்.

## பதினான்காம் நிலை

### தரணியில் அடங்குகிறார் பூமியின் தலைமகன்!



மானிடரை மீட்க வந்தவர்

பணி முடிந்ததாய் பூமிக்குள் அமைதியாகிறார்

அவர் புதைக்கப்படவில்லை - மாறாக

வீறுகொண்டு விருட்சமாக எழ இருக்கின்றார்

வெற்றி பெற்று சாவை வென்று

விடுதலை நாயகனாக மீண்டும் எழுவார்.

விசுவசிப்போம், நாமும் விருட்சமாக மலருவோம்.

## சிலுவைப்பாதை முடிவில்

பொறுத்தருளும் கர்த்தாவே!

உமது ஜனத்தின் பாவங்களைப் பொறுத்தருளும்.

என்றென்றைக்கும் எங்கள்மேல் கோபமாயிராதேயும் சுவாமி.



தயவாயிரும் சுவாமி தயவாயிரும்.

## திருத்தந்தையின் கருத்துக்களுக்காக…

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக!

எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

அருள் நிறைந்த மரியே வாழ்க! / ஆண்டவர் உம்முடனே. / பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே. / உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் / ஆசி பெற்றவரே./

புனித மரியே / இறைவனின் தாயே / பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக / இப்பொழுதும் / எங்கள் இறப்பின் வேளையிலும் / வேண்டிக்கொள்ளும். / ஆமென்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சிமை உண்டாகுக.

தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே, ஆமென்!